**செ. கு. எண்:073** **நாள்: 02.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 2.6.2017

சென்னை பெருநகர காவல், ஆயுதப்படை – 1 உ நிறுமம், 29ம் அணி, இரண்டாம் நிலை காவலர் திரு.V.ஒளிவாணன்; ஆயுதப்படை -1, ஈ-நிறுமம், 22ம் அணியில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. V.சுப்பிரமணி;

மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. C.நாகூரான்;

திருச்சிராப்பள்ளி மாநகரம், அரசு மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து திரு. ச. பழனி;

கன்னியாகுமரி மாவட்டம், தென் தாமரைகுளம் காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. S. கோமள சந்திரன் நாயர்;

ஈரோடு மாவட்டம், கோபி போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. G. ஜெயராஜ் மற்றும் கோபி உட்கோட்டம், கடத்தூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. P.சந்திரசேகரன்;

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. மோகன்குமார்;

மதுரை மாநகரம், கரிமேடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. V.ராஜ்குமார்;

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. செ. வெங்கடேஷ்;

தூத்துக்குடி மாவட்டம், காடல்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. வெ. பால்ராஜ்;

ராமநாதபுரம் மாவட்டம், ஆயுதப்படையில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ப. ராஜ்குமார்;

--------ஆகிய காவலர்கள் பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்தனர்கள் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், அடையார் தோட்டம், மின் பகிர்மான வட்டம், வேளச்சேரி மையப்பிரிவில் கள உதவியாளராகப் பணிபுரிந்து வந்த வேளச்சேரி, தண்டபாணி தெருவைச் சேர்ந்த திரு. பார்த்திபன் என்பவருடைய மகன் திரு.ஆல்பர்ட்;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், காட்டாவூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்ரு என்பவரின் மகள் சிறுமி சௌம்யா மற்றும் சிறுமி ரம்யா;

ஆவடி வட்டம், விளிஞ்சியம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்து என்பவரின் மகன் திரு. தணிகைவேல்;

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், திருவத்தூரைச் சேர்ந்த திரு. சின்னக்கண்ணு என்பவரின் மனைவி திருமதி மல்லிகா;

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையிலிருந்து தாழக்குடி செல்லும் பாதையில் மின்மாற்றி பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த திருப்பதிசாரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கந்தையா என்பவரின் மகன் திரு. மணிகண்டன்;

-------- ஆகியோர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த மேற்கண்ட 18 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**